# ‘அமதி வனம்’ அமலமரித்தியாகிகளின் துறவற இல்லம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர) பயிற்சி பரீட்சை-1 -2020 (சித்திரை)

அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி

கிறிஸ்தவ நாகரிகம் II | 49 | T | II | 3.00 மணித்தியாலம்

தேர்ச்சி 1

(எல்லா வினாக்களுக்கும் விடை தருக)

## பகுதி I

1.

I. நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான வேற்றுமைகளைத் தருக.

II. யூதநாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்திய மொசப்பத்தேமிய நாகரிகத்தின் கூறுகளை குறிப்பிடுக.

III. கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய யூதநாகரிகத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.

IV. கிரேக்க நாகரிகம் எவ்வாறு கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கம் செலுத்தியது என குறிப்பிடுக.

V. உரோமை நாகரிகத்தின் சிறப்பம்சங்களை தருக.

2.

I. கிரேக்க மொழியின் சிறப்பியல்புகள் நான்கு குறிப்பிடுக.

II. அரிஸ்ரோட்டலின் காரணியக் கொள்கைகளை தருக

III. விவிலியத்தில் இலத்தின் மொழியின் செல்வாக்குகள் எவை ?

IV. உரோமை நிர்வாகத்தின் பிரதான அம்சங்கள் 4 தருக?

V. உரோமையரின் சமூக அமைப்பு திருச்சபையில் ஏற்படுத்திய தாக்கங்கள் 4 தருக?

## பகுதி II

1. அ. நாகரிகம் பண்பாடு என்னும் எண்ணக்கருக்களை ஒப்பிட்டு ஆராய்க.

ஆ. பாரம்பரியங்கள் வழக்கொழிந்துவரும் உமது சமூகத்தில் நாகரிகம் பண்பாட்டை விருத்தி செய்ய நீர் யாது செய்வீர் என விளக்குக.

2. அ. “மனித மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்த நாகரிகங்களில் கிரேக்க நாகரிகம் சிறந்ததாகும்” விளக்குக.

ஆ. இன்று நீர் வாழும் சமூகத்தில் இன மத நல்லிணக்கங்களை ஏற்படுத்த எவ்வாறு செயற்படுவீரென விளக்குக.

3. அ. யூத நாகரிகம் ஒரு கலப்பு நாகரீகம் என்பதனை நிருபித்து விளக்குக.

ஆ. பல்சமய சூழலில் வாழும் மக்கள் மத்தியில் ஒரே கடவுள் நம்பிக்கையை வலுப்படுத்த உம்மால் மேற்கொள்ளக்கூடிய விடயங்களை ஆராய்க